**செ. கு. எண்: 121** **நாள்: 03.10.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 3.10.2019</u>

சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கொரட்டூர் கிராமத்தில் மின்பாதை ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. துளசி என்பவரின் மகன் திரு. மூர்த்தி என்பவர் மின்சார கோபுரத்தில் ஏற்பட்ட தீயை அணைக்க முற்பட்ட போது, தீக்காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கருங்கானூர், எலவம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகன் திரு. கவியரசு என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், கீழாந்துரை கிராமத்தைச் சேர்ந்த திரு.முனிசாமி என்பவரின் மகன் செல்வன் ராஜ்குமார் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வெள்ளிச்சந்தை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமசுவாமி என்பவரின் மகள் செல்வி பானுமதி என்பவர் சாலையில் பாலம் அமைக்கும் பணியின் போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், வெங்காரம்பேரையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிங்காரு என்பவரின் மகன் திரு. அன்பரசன் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், முத்துபட்டிணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னையா என்பவரின் மனைவி திருமதி தெய்வானை மற்றும் திரு. லெட்சுமணன் மனைவி திருமதி சரண்யா ஆகிய இருவரும் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், நட்டாலம் கிராமத்தைச் சேர்ந்த திரு.தாமஸ் என்பவரின் மகன் திரு. ராபர்ட் என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மஜரா குச்சிப்பட்டியைச் சேர்ந்த திரு. வெள்ளைச்சாமி என்பவரின் மகன் திரு. பழனிசாமி என்பவர் எதிர்பாராத விதமாக அறுந்து கிடந்த மின் கம்பியை தொட்டதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கோயம்புத்தூர் பைபாஸ் சாலை விரிவாக்கப்பணியில் மின் கம்பம் மாற்றியமைக்கும் பணியின் போது, மின் கம்பம் சாய்ந்து விழுந்ததில், திரு. ஜெயபாண்டி என்பவரின் மகன் திரு. கோபாலகிருஷ்ணன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அ.கலையம்புத்தூர் கிராமத்தில், பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த திருமதி ஜெயந்தி என்பவரின் கணவர் திரு. ஜெகதீசன் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பாச்சல் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜாமணி என்பரின் மகன் திரு. அனுமன் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், கீழ்வீராணம் கிராமத்தைச் திரு. முனுசாமி என்பவரின் மகன் திரு. ஆறுமுகம் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், பெருமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வாஞ்சிநாதன் என்பவரின் மனைவி திருமதி சவுந்தரவள்ளி என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நாராணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினசாமி என்பவரின் மகன் திரு. அருண்குமார் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், சாத்தம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பாஸ்கரன் என்பவரின் மகன் திரு. சௌந்தர் என்பவர் எதிர்பாராத விதமாக, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், ஓடாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பிச்சை என்பவரின் மகள் செல்வி தேவி என்பவர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது, பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், அச்சம்தவிழ்த்தான் கிராமத்தைச் சேர்ந்த திரு. தென்திருப்பதி என்பவரின் மகள் சிறுமி ரக்ஷனா என்பவர் தோட்டத்திற்கு சென்ற போது, பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், செடுத்தான்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. இளஞ்சியம் என்பவரது மகன் செல்வன் தமிழரசன் என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மின்சாரம் தாக்கியும், பாம்பு கடித்தும் உயிரிழந்த **19** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, மேற்கண்ட **19 நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**